வைக்கப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகளில், அரசின் சார்பிலே ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய, அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டிருக்கக்கூடிய உறுதிமொழிகளையும் செயல்படுத்துகின்ற விதத்திலே இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி இந்த விவாதத்திலே பங்கேற்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி முடிக்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-05-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 2-22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் தொலைக்காட்சி கம்பிவடங்கள் அமைத்தல் ஒழுங்குமுறை விதிகளில் திருத் தம் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 28-11-2000 ஆம் நாளிட்ட 676 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

2. எந்த ஒரு மீன்பிடி விசைப்படகும் அல்லது நாட்டுப்படகும் (அவற்றின் அளவுகள் அல்லது பயன்படுத்தப்படும் இயந்திர வகைகளை கணக்கில் கொள்ளாமல்) இரட்டைமடி வலைகள் மற்றும் சுருக்குமடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பு மேற்கொள்வது தமிழ்நாடு சார்ந்த

2001 மே 29]

கடல் பகுதியில் (Territorial Waters) மீன்வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் தடை செய்யப்படுவது குறித்து கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் 25-3-2000 ஆம் நாளிட்ட 40 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

3. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் வணிக வரிகள் துறையின் 2-6-2000 ஆம் நாளன்று உருவாகி, 2-6-2000 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட மிமி(1)வ.வ./45, (நீ.3)/2000 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையில் திருத்தம் செய்துள்ளது குறித்து வணிக வரிகள் துறையின் 6-12-2000 ஆம் நாளிட்ட 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

***

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS